ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்®
For Private Circulation Only

ECHOES
INDIA

செப்டம்பர் 2013 மலர் 6, இதழ் 5

# மணப்பாக்க செய்திகள்

## ஜூன் 2013

ப்ரம்மாண்ட் மற்றும் கன்ஹா திட்ட நில ஆவணங்களில் மாஸ்டர் மிகுந்த அக்கறை கொண்டிருப்பதால், இம்முயற்சியில் ஒரு புதிய செயல் முனைப்பு ஏற்பட்டுள்ளது. மாஸ்டர் டார்ம் 'ஏ'விற்கு வந்து உரையாற்றுகையில், "உங்களைப் போன்று நானும் நில உரிமையாளர் தான். அனைவரின் நன்மைக்காகவும், இது முடிவுற நானும் மிகுந்த விருப்பம் கொண்டுள்ளேன்" என்று கூறினார்.




பாபூஜியின் புத்தகங்கள் சிலவற்றை மாஸ்டர், சகோ.கமலேஷிடம் வழங்கினார். மேலும் தனது நாட்குறிப்பின் சேகரிப்புகளையும் சகோ.கமலேஷிடம் கொடுத்தார். அதற்கு சகோதரர், இது முக்கியமான பொக்கிஷம் என்றும், வருங்காலத்தில் அனைவருக்கும் மிகவும் உதவியாக இருக்கும் என்றும் கூறினார். அதற்கு மாஸ்டர், "எவருக்கும் இது பயனளிக்கும் என்று நான் ஒருபோதும் நினைக்கவில்லை, இதனை என் சொந்தக் காரணங்களுக்காக, வளர்ச்சியைக் கண்காணிக்கவே எழுதினேன்" என்றார். மாஸ்டர், 1964-1994 வரையிலான நாட்குறிப்பைத் தன் கைப்பட எழுதி யுள்ளார். பின்னர், 1995 முதல், நேரிடையாக கணினியில் பதிவு செய்து வருகிறார்.

மாஸ்டர் ஒரு சம்பவம் பற்றிக் கூறினார். ஒரு நாள் காலை 5 மணியளவில், 'காயத்ரி'யில், பாபூஜியின் படுக்கை அறைக்கு வெளியில் அமர்ந்து, தன் நாட்குறிப்பை எழுதிக் கொண்டிருந்தார். திடீரென்று பாபூஜி வெளியில் வந்து, அதனை பார்க்க வேண்டும் என்று கூறினார். மாஸ்டர் நாட்குறிப்பை அவரிடம் காண்பித்தார். "அரே, நான் கூறிய அனைத்தையும் நீ எழுதிக்கொண்டிருக்கிறாயே. எனக்கே அவை நினைவில் இல்லாத போது, நீ எவ்வாறு நினைவில் வைத்துள்ளாய்?" என்று பாபூஜி கேட்டார். மாஸ்டர் அதற்கு, "நான் என்னையே அந்நாளுக்குள் பொருத்திக் கொண்டுவிடுகிறேன். அப்போது நடந்த அனைத்தும் என் முன்னால் தெரிகிறது" என்று பதிலளித்தார். இதைக் கேட்டவுடன் பாபூஜி மிகவும் மகிழ்ச்சியடைந்து, "இது தான் ஆய்வு" என்றார்.

மாஸ்டர், படுத்தவுடனேயே அவர் எவ்வாறு உறங்கி விடுகிறார் என்று பாபூஜி அவரிடம் கேட்டதைப் பற்றியும் குறிப்பிட்டார். மாஸ்டர் அதற்கு, "எனது நெற்றியிலிருந்து உறக்கம் மெல்ல கண்களில் இறங்குகிறது என்று நான் கற்பனை செய்த உடனேயே, நான் உறங்கிவிடுகிறேன்" என்றார். பாபூஜி, "ஆய்வு என்பது நிறைய பக்கங்களைக் கொண்ட கோட்பாடை எழுதுவது அல்ல. இது தான் உண்மையான ஆய்வு" என்றும் பதிலளித்தார்.

"பாபூஜியுடன் பயணம் செய்த போதுதான், நிறைய வேலைகளைக் கற்றுக் கொண்டேன். என்னை வேலை செய்யக் கூறிவிட்டு அவர் கவனிப்பார். பல சமயங்களில், அவர் அருகில் என்னை அமரச் சொல்லி, அவருடனேயே என்னையும் பிராணாஹுதி அளிக்கக் கூறுவார். இன்னும் பத்து வருடங்களாவது அவருடன் இருக்க வேண்டும் என்று விரும்பினேன். என்னுடன் 2006அல்லது 2007 வரை இருப்பேன் என்று பாபூஜி கூறியிருந்தார். ஆனால் பல வருடத்திற்கு முன்பே அவர் சென்றுவிட்டார்," என்று மாஸ்டர் கூறினார்.

## ஜூலை 2013

மாஸ்டர், சில மாதங்களுக்கு முன்பு, இணையதளத்தில், *'மெனி லைவ்ஸ், மெனி மாஸ்டர்ஸ்'* என்பதன் ஆசிரியர் பிரெயின் வெய்ஸ் என்பவரின் நிகழ்ச்சியை பார்த்துக் கொண்டிருந்தார். *'மிராக்கிள்ஸ் ஹேப்பென்'* என்ற தலைப்பில் ஒரு புதிய புத்தகத்தை பிரெயின் வெய்ஸ் எழுதியுள்ளார். அதனை மாஸ்டர் படிக்கத் துவங்கியுள்ளார். பின்னோக்கிச் செல்லும் சிகிச்சையின் மூலம், மக்கள் தங்கள் கடந்த கால வாழ்க்கைக்கு செல்வதைப் பற்றியது அது. அதில் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், நாம் அனைவரும் ஒன்று என்பதாகும். இவ்வாழ்க்கையில், எவ்வாறு நமது சந்திப்புகளும், தோழமைகளும் தற்செயல் அல்ல, ஆனால் அந்தத் தொடர்புகள் கடந்த பல வாழ்க்கைகளின் தொடர்ச்சியே என்பது பல உதாரணங்கள் மூலம் காட்டப்பட்டுள்ளது.

ஒரே சமயத்தில் மாஸ்டர் இரண்டு, மூன்று புத்தகங்களை படிக்கிறார். புத்தகம் படிக்கும் நிகழ்ச்சிக்கு இவற்றில் ஏதேனும் ஒன்றைத் தேர்ந்தெடுக்கிறார். ஒமேகா பள்ளியின் இரு மாணவர்கள், வார இறுதியில் வந்து புத்தகத்தை அவருக்காகச் சத்தமாகப் படிக்கிறார்கள். வாசிப்பவரை கவனிக்கும் போது, அவர் தன் கண்களை மூடி, என்ன படிக்கப்படுகிறது என்பதில் கவனம் செலுத்துகிறார். படிக்கும்போதே அவன் அல்லது அவள் செய்யும் தவறுகளை அவர்களே திருத்திக் கொள்ளவும் அவர் உதவுகிறார்.







## சிங்கப்பூர் தியான மையம் துவக்க விழா

ஜூலை 3, 2013, புதன்கிழமை: "சிங்கப்பூரில் இந்த தியான மையத்திற்காக நாம் நீண்ட நாட்களாகக் காத்துக் கொண்டிருக்கிறோம்" என்று மாஸ்டர் சொன்னார். அவர் மிகவும் சீக்கிரமாகவே புறப்பட்டு, காணொலித் தொடர்பின் மூலமாக சிங்கப்பூர் அப்யாசிகளுடன் சேர்ந்து கொள்வதற்குத் தயாரானார். முன்னதாக, சிங்கப்பூர் அப்யாசிகள் தியானத்தில் அமர்வதற்கு அறிவுரை தரப்பட்டிருந்தனர். பின்னர் மாஸ்டர் அவர்களோடு சேர்ந்து கொள்வார் என்று சொல்லப்பட்டிருந்தது. சிங்கப்பூர் தியான மையத்தில் சத்சங்கம் முடிந்தவுடனே, மாஸ்டர் ஆவலோடு தனது அலுவலக அறைக்குள் நடந்து வந்தார். அவர் சிங்கப்பூரிலுள்ள அனைத்து அப்யாசிகளையும் வரவேற்று, அதன் பின், மிகவும் அழகான சொற்பொழிவாற்றி னார். அதில் அவர் குழந்தைகள் பாடலான 'Twinkle twinkle little star' என்பதைக் குறிப்பிட்டு, "உங்களுக்குத் தெரியுமா? வைரமானது வெளிப்புறத்திலிருந்து ஒளியைப் பிரதிபலிக்காது. அது, 'முழுமையான உள்புற பிரதிபலிப்பு' என்று கூறப்படும் ஒன்றைத் தன்னிடத்தே கொண்டுள்ளது. வைரத்தின் உள்ளே இருக்கும் ஒளியானது சிறிது கூடத் தவறாமல் முழுமையாகப் பிரதிபலிக்கப்படுகிறது. அவ்வாறாகத்தான், அது மிகவும் சிறப்பு வாய்ந்ததாகவும், மிகவும் அற்புதமானதாகவும், அழகாகவும் இருக்கிறது.....நாம் தியானம் செய்ய வேண்டிய, நமது இதயத்தில் உள்ள ஒளியானது, வளர்ச்சியடைந்து, உள்ளே சென்று, பிரதிபலிக்க அனுமதிக்கப்படவேண்டும். அதனால் ஒரு நாள், நாமும் ஒளி வீசும் நட்சத்திரமாக மாறுவோம்" என்று கூறினார். மாஸ்டர் அதன் பிறகு குழந்தைகளை முன்னால் வரச்சொல்லி அழைத்து, அவர்களிடம், எவ்வாறு இயற்கையில் உள்ள அனைத்தும் உள்ளிருந்து வளர்கின்றனவோ அதே போல், ஆன்மீக வளர்ச்சியும் உள்ளிருந்து வளர வேண்டும் என்று கூறினார்.

ஒரு நாள் மாஸ்டர் சீக்கிரம் விழித்துக்கொண்டார். வெளியே வந்து அமர விரும்பினார். மாஸ்டர் சிறிது நேரம் அமைதியாக அமர்ந்துவிட்டுப் பிறகு செய்தித்தாளைப் படித்துக் காட்டச் சொல்லிக் கேட்டார். ஆயினும், சிறிது நேரத்திற்குப் பிறகு, சகோ.சத்பீர் வந்ததும், மாஸ்டரின் மனமானது தனக்கு வந்திருக்கும் மின்னஞ்சல்களை பார்ப்பதற்கு விழைந்தது. அவரது அமைதியின்மையை ஒருவரால் காண முடிந்தது. அவருக்கு எப்போதுமே வேலைதான் முதன்மையாக இருக்கிறது.

### புதன்கிழமை, ஜூலை 10, 2013

மாஸ்டர் காலை 9.00 மணிக்கு, 40 நிமிட சத்சங்கத்தை நடத்தினார். பின்னர், நான்கு திருமணங்களையும் ஒரு நிச்சயதார்த்தத்தையும் நடத்தி வைத்தார். இதன் பிறகு அவர் மிகவும் களைப்படைந்து விட்டதால், ஓய்வு எடுக்கச் சென்றார். அதே நாள் மாலையில் வெளியே மழைத் தூறல் இருந்ததன் காரணமாக, மாஸ்டர் சத்சங்கத்தை முன்தாழ்வாரத்திலிருந்து கொண்டே நிகழ்த்தினார். சத்சங்கம் முடிந்த பிறகு, சுமார் முப்பது நிமிடங்கள் பலத்த மழை பெய்தது.

அடுத்து வரப்போகும் பிறந்தநாள் கொண்டாட்டங்களுக்காகச் சென்னையில் சுமார் 10,000 பேர் தங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வந்தன. மாஸ்டர் வரவுசெலவுகளுக்கான திட்டத்தைத் தயார் செய்து தன்னிடம் கொடுக்கும்படி கேட்டார்.

சென்னையில் பருவமழை ஆரம்பித்துவிட்டது. மாஸ்டர் ஒரு நாள் இரவு தனது சக்கர நாற்காலியில் வெளியே வந்து, பெருமழையை பார்த்துக்கொண்டிருப்பதில் சந்தோஷம் அடைந்தார். "நமது தண்ணீர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு, இதே போல் இரண்டு மணி நேரம் மழை பெய்ய வேண்டும் "என்று அவர் சொன்னார்.

அநேகமாக எல்லா நாளும் பிரிபெக்ட் சிட்டிங் தருவதை மாஸ்டர் வழக்கமாகக் கொண்டிருக்கிறார். ஒரு நாளில், முதன்முதலில் மாஸ்டர் செய்ய விரும்பும் காரியம் இதுதான். மேலும் அவர் மிகவும் கவனத்துடன் இந்த வேலையில் ஈடுபடுவதால், அதைச் செய்து முடிக்கும் வரையில், வேறு எந்தத் தகவலும் அவரது கவனத்தைச் சிதற அடிக்க முடியாது.

### சனிக்கிழமை, ஜூலை 13, 2013

மாஸ்டருக்கு அன்றைக்கு வரிசையாக நிறைய சிட்டிங்குகள் இருந்தன. 7.15 மணியளவில் அவர் சிட்டிங்குகளை முடித்துக்கொண்டார். அதன் பின்னர் கண் சிகிச்சை ஆரம்பமானது. L. சுப்பிரமணியம் அவர்களின் இசையைக் கேட்டுக்கொண்டே மாஸ்டர் தனது தலைமுடி வெட்டப்படுவதைச் செய்து கொண்டார். அதே சமயத்தில், அவரோடு மிகவும் நெருக்கமாக இருந்த ஒரு அப்யாசி மறைந்த செய்தி வந்தது. மாஸ்டரின் மனோபாவம் மாறியது. அவர் முற்றிலும் மாறுபட்ட வேறோர் உலகத்தில் இருந்தார்.

"ஒரு நொடி இங்கே இருக்கிறோம், அடுத்த நொடி போய் விடுகிறோம். யாருக்கும் தெரிவதில்லை நாம் எங்கே போகிறோம் என்று," என்று அவர் கூறினார். இதன் பிறகு அவர் பூரணமான அமைதியுடன் அடுத்த ஒரு மணி நேரம் கண்களை மூடிக் கொண்டோ அல்லது வானவெளியைப் பார்த்துக்கொண்டோ அமர்ந்திருந்தார்.



**ஞாயிறு ஜுலை 14, 2013**

மாஸ்டர் தியானக் கூடத்திற்குச் செல்லத் திட்டமிட்டார். ஆனால், காலையில் அவருக்கு சற்று தடுமாற்றம் இருந்ததால், மருத்துவர்கள் அவரைக் காட்டேஜில் இருக்கும்படி அறிவுறுத்தினர். காட்டேஜின் நடுக் கூடமானது, மாஸ்டர் கல்யாணங்கள் நடத்திவைக்கும் இடமாக மாறியுள்ளது. அவர் அங்கு சத்சங்கம் நடத்திய பின்னர், ஐந்து திருமணங்களையும் நிகழ்த்தி வைத்தார்.

மாஸ்டர் ஹாலில் அமர்ந்து சகோ. சம்ஸ்க்ருத கண்ணன் நடத்திய கீதை சொற்பொழிவைக் கேட்டார். இதுவரையில் அவர் கீதையின் முதல் ஆறு பகுதிகளை நிறைவு செய்துவிட்டார். ஒவ்வொரு பகுதியின் இறுதியிலும், மாஸ்டர் முடிவுரையாகச் சில கருத்துக்களைக் கூறுவது வழக்கம்.

ஜுலை 20ஆம் தேதி, பார்கவ் அமெரிக்காவிலிருந்து திரும்பியபொழுது, மாஸ்டர் மிக்க மகிழ்ச்சியுடன், "என் பேரனுக்கு நல்வரவு, உனக்காகத்தான் நான் காத்துக்கொண்டு இருக்கிறேன்" என்று கூறினார். சிறிது நேரம் தன் குடும்பத்தினருடன் கழித்த பின்னர், அங்கிருந்தவர்களுக்கு சிட்டிங் கொடுத்தார். சிட்டிங்குக்குப் பிறகு, சகோ. உல்லிமியர், சகோ. ஆல்பர்டொ ஆகியோருடன் பல்வேறு பயிற்சி நிகழ்ச்சி களைப் பற்றிக் கலந்துரையாடினார். அவர் அவர்களிடம், "வளர்ச்சியுடன் உடன் வரும் அகங்காரம் இல்லாமல் எப்படி வளர்ச்சியடைவது--அதுதான் அவ்வளர்ச்சியின் ரகசியம். உதாரணத்திற்கு குழந்தைகளை எடுத்துக்கொள்ளுங்கள். அவர்களுக்கு மூன்று வயதாகும் போது, அகங்காரம் உடையவர்களாகிவிடுகிறார்கள். தந்தை 'இதைச் செய்' எனும்பொழுது, 'எனக்கு தெரியும்' என்று கூறுகின்றனர். அந்த அகங்காரம், வளர்ச்சியின் ஆரம்பத்தில் சுய நம்பிக்கையைக் கொடுக்கவும், உலகத்தை எதிர்கொள்ளவும், சமுதாயத்துடன் பழகவும் தேவையாக இருக்கிறது. ஆனால் அது நம் முதல் பற்களான பால் பற்களைப் போன்றது. அவை விழுந்து விடவேண்டும். அதே போல், இந்த அகங்காரமும் பக்குவமடைய வேண்டும். அல்லது, அந்த அகங்காரம், பணி



வாக மலர வேண்டும்," எனக்கூறினார்.

**திங்கட்கிழமை, ஜுலை 22,2013, குரு பூர்ணிமா**

குருபூர்ணிமா தினம், குருவிடம் வந்தடையும் ஒரு அப்யாசியின் வாழ்க்கையில் மிக முக்கியமான தினமாகும். ஆசிரமத்தில் அப்யாசிகள் நிரம்பி வழிந்தனர். மாஸ்டர் காலையிலேயே சீக்கிரமாகத் தயாராகி, நிறைய அப்யாசிகளைச் சந்தித்தார். ஹைதராபாத் அப்யாசிகள், கன்ஹா சாந்தி வனத்தின் பெரிய மாதிரி வடிவத்தை கொண்டு வந்து காண்பித்தபோது, அதை நுணுக்கமாகக் கேட்டறிந்தார். மாஸ்டர் அந்த மாதிரி வடிவத்தைப் பிற அப்யாசிகளிடம் பெருமையுடன் காண்பித்து, அதன் பல்வேறு முக்கிய அம்சங்களை விளக்கிக் கூறி மகிழ்ந்தார்.

மாஸ்டர் தியான மண்டபத்தில் காலை சத்சங்கம் நடத்திய பின்னர் உரையாற்றினார். அந்த உரையில், சகஜமார்க்கம் நமக்குத் தர, எல்லையற்ற ஆசிகளைக் கொண்டுள்ளது. ஆனால் நம்மால் அவற்றில் எவ்வளவை எடுத்துக்கொள்ள முடிகிறது? என வினவினார். அவர், "நீங்கள், உங்களை நேர்மையான சுயபரிசோதனைக்கு உட்படுத்திக் கொண்டு, சுய மதிப்பீடு செய்து கொள்வதிலிருந்து உங்களைத் தவிர்க்காதீர்கள். இப்பொழுதிலிருந்தாவது, உங்களுக்கே தெரிந்த மன அசுத்தங்களை வெளியேற்றத் தொடங்குங்கள்" என்று கூறினார்.

## மாஸ்டரின் 87வது பிறந்த நாள் விழா கொண்டாட்டங்கள்

மாஸ்டர் விடியற்காலையிலேயே தயாராக இருந்தார். அவர் சமையல் அறையைச் சேர்ந்த அப்யாசிகள் கொண்டுவந்த பிரசாதத்தை ஆசிர்வதித்து, அவர்கள் விருப்பப்படி கேக்கையும் வெட்டினார். சகோ.கிருஷ்ணா குடும்பத்தினரும், சகோ.கமலேஷ் குடும்பத்தினரும் மாஸ்டரைச் சந்தித்தனர். சூரிய உதயமாவதற்கு முன்பே, நிறைய அப்யாசிகள் காட்டேஜ் வாசலில் காத்திருந்தனர். மாஸ்டர் அவருடைய படுக்கையறையிருந்தபடியே அப்யாசிகள் சந்திக்கவும், வாழ்த்தவும், காட்டேஜ் தொண்டர்கள் உதவி புரிந்தனர். சத்சங்கத்திற்கு முன்பே சுமார் 250 அப்யாசிகள் அவரை சந்தித்திருப்பார்கள். மாஸ்டர் சக்கர நாற்காலியில் தியான மண்டபத்திற்கு வந்தார். இந்த வருடம் பண்டாரா இல்லாததால், அப்யாசிகள் அவரவர் மையங்களில் கொண்டாடும்படி கூறப்பட்டிருந்தனர். சென்னையில்






நடக்கும் நிகழ்ச்சிகளை வீடியோ மூலம் நேரடி ஒலிபரப்பிற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அங்கு நடந்த சத்சங்கம், புத்தக வெளியீடுகள், மாஸ்டரின் உரை, அவர் கிளம்புவதாக அறிவிப்பு, உடனே அவர் மறுபடி பேசுவதாகக் கூறியதால் கிடைத்த இரண்டு உரைகள், பஜன், அனைத்தும், மணப்பாக்கம் மற்றும் இதர இடங்களில் இருந்த அனைவருக்கும் ஒரு சுவர்க்கம் போல, உன்னதமான உணர்வினை கொடுத்தன.

அவரின் முதல் உரையில், ஆன்மீக முன்னேற்றமானது நமக்கு மட்டுமல்ல என்பதை நினைவூட்டினார். நம் குழந்தைகளும், நமது சமுக வட்டமும் நம்முடன் முன்னேற்றத்தை காண வேண்டும். மேலும் அவர், "வாய்ப்புகளைத் தேர்ந்தெடுக்கக்கூடிய சுதந்திரம், நமக்கு மிக ஆபத்தானது, ஏனெனில், நமக்கு சரியான வாய்ப்பை தேர்ந்தெடுக்கக்கூடிய விவேகம் இல்லாதவரை, அனைத்து தவறான விஷயங்களையும் தேர்ந்தெடுத்து, அதனால் உங்களையே தண்டித்துக்கொள்ளத்தான் அந்த சுதந்திரம் உதவுகிறது..... சகஜ மார்க்கம் எளிமையான ஒன்று. ஆனால் அவ்வாறு எளிமையாக இருக்க, துணிவு தேவை. மனதில் உள்ளதை ஒளிவு மறைவின்றி உரைப்பதிற்கு தைரியம் வேண்டும்." என்று கூறினார்.



தன் இரண்டாவது உரையில் மாஸ்டர், " நீங்கள் அனைவரும் இன்றி நான் தனிமையை உணர்கின்றேன். விழா ஆரம்பிக்குமுன்னரே, அவர்கள் எல்லோரும் சில நாட்களுக்கு மட்டுமே வந்திருந்து பின் சென்று விடுவார்கள். அதன் பின் நான் மிகுந்த வருத்தத்திலும் தனிமையிலும் ஆழ்ந்திருப்பேன் என நினைத்துக்கொண்டிருப்பேன். ஆகையால் என் தனிமையை போக்கும் வகையில், என் ஆன்மீகப் பாதையில் எனக்குத் துணைகள் தேவை. அத்தகையவர்கள் இங்கு இருப்பினும், இல்லாவிடினும் அவர்களின் பிரசன்னத்தை எப்பொழுதும் என்னால் உணர்ந்து கொள்ள முடியும்" எனக்கூறினார்.

காலை சத்சங்கத்திற்கு பின், மாஸ்டர் அப்யாசிகளை தன் குடிலில் சந்தித்தார். மதிய வேளையில் ரஷ்யாவிலிருந்து வந்திருந்த சுமார் 50 அப்யாசிகள் மாஸ்டரின் படுக்கை அறையில் அமர்ந்து கொண்டனர். அங்குள்ள சூழ்நிலை மிகவும் இலகுவானதாக மாறியது. மாஸ்டர் திடீரென்று அவர்களுக்கு சிட்டிங் கொடுக்க தீர்மானித்தார். அவர் ரஷ்யா செல்ல மிகவும் ஆவலாக இருப்பதை வெளிப்படுத்தினார். அடுத்த வேனில் காலத்தில் அவரை அங்கு வரவேற்க அக்குழு திட்டமிட்டுக்கொண்டிருக்கிறது. இத்தகைய மகிழ்ச்சியான, இயற்கையான சம்பவங்கள் ஏற்படும்போது, மாஸ்டரின் உடல் நலம் ஒரு பிரச்சனையாகவே இருக்க முடியாது. உடல் நலம் குன்றிய இத்தருணத்திலும், பயணம் மேற்கொள்ள விழையும் மாஸ்டரின் ஆர்வத்தைக் கண்டு, எல்லோர் கண்களும் மகிழ்ச்சியால் பனித்தன.

மாலையில், தியான மண்டபத்தில், புல்லாங்குழல் விற்பன்னர் சகோ.ஷஷாங்க், சங்கீத இணைவு (fusion) மூலம் ஒரு இசை நிகழ்ச்சி வழங்கினார். மாஸ்டர் இதை சிறிது நேரம் நேரலை ஒளி பரப்பு மூலம் பார்த்து ரசித்தார். பின் வழக்கம் போல் ஒரு திரைப்படம் பார்த்துவிட்டு, இரவு 10 மணி அளவில் ஓய்வெடுக்க சென்றார்.

### வியாழன் ஜூலை 25, 2013

மாஸ்டர் தன் அலுவலகத்தில், மின்னஞ்சல்களை படித்துக் கொண்டு, சத்சங்கம் முடிவடையக் காத்திருந்தார். பிறகு





மாஸ்டர், சகோதரர் கம்லேஷின் உரையை மிக கவனமாகக் கேட்டார். அதைத் தொடர்ந்து மால்டோவா தியானக் கூடத்தைப் பற்றி ஒரு சிறிய வீடியோ ஒளிபரப்பப்பட்டது. அதைப் பார்த்து மாஸ்டர் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார். தியானக்கூடத்தின் வடிவமைப்பு மிகச் சிறப்பாக இருந்தது. சமையலறை மற்றும் சாப்பாட்டு அறை வசதிகள் உயர்தரமாக இருந்தன. தங்கும் அறை வசதிகள், நவநாகரீகமான ஓட்டல் அறைகளைப் போல இருந்தன. மாஸ்டர், தியானக்கூடம் ஒரு விண்கலம் புறப்படுவதைப் போலிருப்பதாகக் கூறினார். மிகக் குறைந்த எண்ணிக்கையில் அப்யாசிகளைக் கொண்ட ஒரு சிறு மையத்திலிருந்து, இத்தனை ஆர்வத்தைக் கண்டு மாஸ்டரும், சகோதரர் கம்லேஷும் மிக்க மகிழ்ச்சியும் சிலிர்ப்பும் அடைந்தனர். வீடியோ முடிந்தவுடன் மாஸ்டர் அந்தக் குழுவிற்கு ஒரு சிட்டிங் வழங்கி, பின்னர் அவ்வறையில் இருந்த எல்லோரையும் சிட்டிங்கின் போது தங்கள் அனுபவத்தைப் பற்றிக் கூறுமாறு கேட்டார். ஒவ்வொருவரும் தாங்கள் உணர்ந்ததை விவரித்ததைக் கேட்ட பின்னர் மாஸ்டர், "நான் பணிபுரிகையில் விசேஷ உத்தியை உபயோகித்ததால் இந்த சிட்டிங் விசேஷமானதாகும்" என்று கூறினார்.

வெற்றி மற்றும் தோல்வியைப் பற்றிப் பேசுகையில் மாஸ்டர், "தோல்விக்குத் தனிமனிதனைக் காரணமாகக் குறிப்பிட முடியும், ஆனால் வெற்றிக்கு அப்படியல்ல. என்னுடைய 'விற்பனை உரைகளில்' நான் ஒத்துழைப்பைப் பற்றிப் பேசுவதுண்டு. கார் நன்றாக இயங்கும் போது ஏன் இயங்குகிறது என்று கூற முடியுமா? உங்களால் முடியாது. ஆனால் அது இயங்கவில்லை என்றால், உங்களால் அது தோல்வியுற்றதன் காரணத்தை நிச்சயமாகக் கூற முடியும்," என்று கூறினார்.

## ஆகஸ்ட் 2013

வெள்ளிக்கிழமை, ஆகஸ்ட் 2 அன்று மாஸ்டருக்கு சந்திர நாட்காட்டியின்படி பிறந்த நாளாகும். அன்று காட்டேஜிலிருந்த அனைத்து சகோதரர்களும், வேட்டியும் நீலச் சட்டையும் அணிந்திருந்தனர். மாஸ்டர் காலையில் பிரசாதம் வழங்கியதுடன், சுமார் ஐம்பது பேருக்கு மதிய உணவு ஏற்பாடு செய்திருந்தார். அவர் முற்றத்திற்கு வந்து அனைவருடனும் மதிய உணவு உண்டார்.

## வட அமெரிக்க ப்ரிபெக்டு கருத்தரங்கம் - ஆகஸ்ட் 8-10

எட்டாம் தேதி காலை, ப்ரிபெக்டுகள் காட்டேஜுக்கு வெளியே கூடியிருந்த போதும், மாஸ்டருக்கு உடல் நலமில்லாமல், அவர்களுடன் பேச முடியாமல் போனதால், நிகழ்ச்சியில் மாற்றம் ஏற்பட்டு அவர்கள் கலையரங்கத்திற்குத் திரும்பச் சென்றனர்.

இருந்தாலும் மாலையில் மாஸ்டர், எல்லோரும் ஆச்சரியப்படும் வகையில் காட்டேஜுக்கு வெளியே வந்து அமர்ந்தார். வட அமெரிக்க ப்ரிபெக்டுகள் அவருடன் நேரம் கழிக்கமுடிந்தது. மாஸ்டர் அனைவருடனும் உரையாடினார்.

'டீப்பெனிங் ப்ரிபெக்ட்ஸ் எக்ஸ்பீரியென்ஸ்' [ப்ரிபெக்டுகளின் அனுபவத்தை ஆழமாக்குதல்] என்ற நிகழ்ச்சியை சுமார் 140 ப்ரிபெக்டுகளுக்கு, சகோதரர் சந்தோஷ் சீனிவாஸன் மற்றும் 14 ஒருங்கிணைப்பாளர்கள் நடத்திக் கொடுத்தனர். மூன்று நாட்களும் சகோதரர் கம்லேஷ், ப்ரிபெக்டுகளுக்கு உரைகள் வழங்கினார். கருத்தரங்கம், கேள்வி பதில் நேரத்துடன் ஞாயிற்றுக்கிழமை முடிந்தது.

## வெள்ளிக்கிழமை ஆகஸ்ட் 9, 2013

ரம்ஜானின் கடைசி தினமான ஈதன்று, ஆசிரமத்திற்கு அருகே உள்ள ஒரு முஸ்லிம் குடும்பத்தினர், வழக்கமாக வந்து மாஸ்டரின் ஆசீர்வாதத்தைப் பெறுவதுண்டு. மாஸ்டர் அவர்களை வரவேற்று, குழந்தைகளை சந்தித்து அவர்களுக்கு இனிப்பு மற்றும் பிரசாதம் வழங்கி, அதை அங்கிருந்த எல்லோருக்கும் வழங்கியதுடன் ஒரு சிட்டிங்கும் நடத்தினார்.

## வட அமெரிக்க கருத்தரங்கம் - ஆகஸ்ட் 11- 17




வட அமெரிக்கா மற்றும் கானடாவிலிருந்து வந்த சகோதர சகோதரிகள் ஒன்று கூடி, 'முன்கணிப்பு ஆன்மீக வளர்ச்சிக்கு முக்கிய தடையாகும்' என்ற, மாஸ்டர் வழங்கிய தலைப்பைப் புரிந்து கொண்டு, ஆன்மீக வளர்ச்சி அடைவதில் ஈடுபட்டிருந்தனர். மாஸ்டர், குறிப்பாக சகோதரர்கள் பி.ஆர். கிருஷ்ணா, கம்லேஷ், ராப் க்லிங்கர், கண்ணன், வினோத் மற்றும் சகோதரி எலிஸபெத் ஆகியோரை பேச்சாளர்களாக நியமித்தார்.

சகோதரர் கம்லேஷ், மிஷன் புத்தகங்களைப் படிப்பதன் முக்கியத்துவதை வலியுறுத்தி, மதிய வேளைகளில் நமது மாஸ்டர்களின் புத்தகங்களைப் படிக்கலாம் என்றும் கூறினார்.

நம் உயர்ந்த மாஸ்டர்கள் எழுதியிருப்பதன் மீதான








◀ ஆகஸ்ட் 15 ம் தேதி, இந்திய சுதந்திர தினத்தன்று, சகோ. கம்லேஷ் இந்திய தேசியக் கொடியேற்றுகிறார்.






பின்னணியைக் கொண்டிருப்பதன் முக்கியத்துவத்தைப் பற்றி அவர் விவரித்தார்.

சகஜமார்க்கம், ஆன்மீக வாழ்க்கையின் பங்கு, இளைஞர்களாக ஆன்மீகத்துடன் உள்ள தொடர்பு, மற்றும் அவர்கள் வாழ்க்கையில் மாஸ்டரின் பங்கு முதலியவற்றைப் பற்றி விவாதிக்க ஆர்வமுள்ள இளைஞர்களுக்கு, இக்கூட்டம் பயிற்சி அளித்தது.

சகோ. விக்டர் கண்ணன், u-connect (university connect) பயிற்சி முறையை, ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு அறிமுகம் செய்து வைத்தார். சகோ. கிருஷ்ணலிங்கா, மேற்படிப்பு படிக்கும் அப்யாசிகளுக்கு, சகஜமார்க்க முறையை வரும் சந்ததியனர்க்கு கொண்டு செல்ல, அவர்கள் செயல்படவேண்டும் என அழைப்பு விடுத்தார்.

சென்னையில், இக்கருத்தரங்கு நடைபெற்ற நாட்களிலெல்லாம் தொடர்ந்து மழை பெய்து கொண்டிருந்தது. 16 ம் தேதியன்று, வானம் வெளிறத் தொடங்கியது. ஒவ்வொரு மாலையும் சிட்டிங்கிற்குப் பின், மாஸ்டர் குடிலின் வாயில் அப்யாசிகளுக்காகத் திறந்து விடப்பட்டது. 16 ம் தேதியன்று 8 வயது சிறுவன் ஒருவன் மாஸ்டரிடம் தைரியமாக, " மாஸ்டர், ஏன் கடவுள் உங்களுள் ஒளிந்து கொண்டிருக்கிறார்; ஏன் அவர் தன்னை காட்டிக்கொள்வதில்லை?" என வினவினான். அதற்கு மாஸ்டர், "கடவுள் அப்படி மறைந்து இருப்பதற்கு ஏதோ ஒரு காரணம் இருக்கிறது. அக்காரணம் வெளிப்பட்டுவிட்டால், அவர் ஒளிந்திருப்பதன் நோக்கம் என்ன?" என பதில் உரைத்தார். மாஸ்டரால் மட்டுமே இப்படி ஒரு அழகான பதிலைக் கூறியிருக்க முடியும்.

17ம் தேதி மாலை அவர் பெரியதொரு குழந்தைகள் குழுவுடன் கை குலுக்கி, பேசி, சிரித்துக்கொண்டிருந்தார். குழந்தைகளும், மாஸ்டரின் அருகில் மிக்க மகிழ்ச்சியுடன் காணப்பட்டனர். கொஞ்சம் கொஞ்சமாக பெரியவர்கள் தைரியத்தை வரவழைத்துக்கொண்டு, மாஸ்டருக்கு வணக்கம் சொல்லி, அவருக்கு இனிப்புகளும், பரிசுகளும் வழங்கினர். மாஸ்டர் மிகுந்த பொறுமையுடனும், அமைதியுடனும் ஒவ்வொருவரையும் சந்தித்தார். ஒரு சகோதரர், இக்கருத்தரங்கத்தின் கருவை மனதில் நிறுத்தி, மாஸ்டரிடம், "மாஸ்டர், அன்பு, முன்கணிப்பிற்கு எதிரானதா?" என வினவ, மாஸ்டர் உடனடியாக, "அன்பிற்கு எதிர்மறை எதுவுமில்லை," என பதிலளித்தார். எப்படி கடவுளுக்கு எதிராக ஒன்றுமில்லையோ, அதே போன்று அன்பிற்கு எதிர்ப்பதமாகவும் ஒன்றுமில்லை" எனக் கூறினார்.




மாஸ்டரின் உடல் நலம் பற்றி வினவ, அதற்கு அவர், "உடல் நலம் மிக நன்றாக இல்லை; ஆனால் புகார்களும் இல்லை," என பதிலளித்தார். அமைதியால் நிரம்பியிருந்த அந்த வேளையில், அவரைக் காண்பது, மனதைத் தொடுவதாக இருந்தது.

கருத்தரங்கின் போது, மாஸ்டரின் உடல் நலம் சீராக இல்லை. எனவே, ஏற்பாடாகியிருந்த பல கூட்டங்கள், சத்சங்கங்கள், ரத்து செய்யப்பட்டன. இருப்பினும் மாஸ்டரின் பிரசன்னம் எங்கும் உணரப்பட்டது. உடல் நலம் ஈடுகொடுத்த போதெல்லாம் மாஸ்டர் வெளியே வந்து, அப்யாசிகளைச் சந்தித்து, நிகழ்த்தப்பட்ட உரைகளையும் கேட்டார். "அப்யாசிகளுடன் நான் இருக்க வேண்டிய நேரம், (மேலே பாபூஜி மகராஜை நோக்கி கையை காட்டி ) அங்கிருந்துதான் தீர்மானிக்கப்படுகிறது. மேலும் மேலும் அது ஒரு வரையறைக்குள் உட்படுத்தப்படுகிறது. எதுவுமே அளவிற்கு மீறி இருந்தால் அதற்கு மதிப்பு இருக்காது. ஆகையால் ஒவ்வொருவரும் கிடைத்த வாய்ப்பை முழுவதுமாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும்," என்று அவர் வலியுறுத்தினார்.



# பூஜ்ய மாஸ்டரின் 87 வது பிறந்தநாள் விழா கொண்டாட்டங்கள்

அன்பிற்குரிய மாஸ்டரின் 87வது பிறந்தநாளை கொண்டாட, நாடு முழுவதும் முழு நேர நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பல்வேறு மையங்களில், காலைத் தியானத்துடன் நாள் துவங்கப்பட்டு, தொடர்ந்து சிறுவர்கள் மற்றும் அப்யாசி இளைஞர்கள் நடத்திய சிறு நாடகங்கள், நடனங்கள் போன்றவை இருந்தன. அப்யாசி சகோதர, சகோதரிகள் பாடிய பஜனைகள், பக்தியும் சாந்தமும் கொண்ட சூழலை உருவாக்கின.

அன்பிற்குரிய மாஸ்டரை திரையில் கண்டபோது, அப்யாசிகளின் இதயங்களில் உள்ளார்ந்த ஆனந்தம் பரவியது. சென்னையிலிருந்து ஒளிபரப்பப்பட்ட நேரடி நிகழ்ச்சிகள், மாஸ்டரின் பிரசன்னம் நேராக இருப்பதைப் போன்ற உணர்வை ஏற்படுத்தியது. மேலும், சில மையங்களில் கேக் வெட்டியும், பிறந்த நாள் பாட்டு பாடியும் கொண்டாடினர். இதைத் தொடர்ந்து விஸ்பர்ஸில் இருந்து ஆன்மிக செய்திகள் வாசிப்பது, சிறுவர்களின் கலை நிகழ்ச்சிகள், சிறு நாடகங்கள் போன்றவை நடத்தபட்டன.

பல மையங்களில், விழாவிற்கு வந்திருந்த அப்யாசிகளின் எண்ணிக்கையானது, பொதுவாக சத்சங்கத்திற்கு வரும் அப்யாசிகளின் எண்ணிக்கையை விட, பலமடங்கு அதிகமாக இருந்தது. அனைத்து மையங்களிலும், உரைகள், சிறு நாடகங்கள், குழுக்கலந்துரையாடல்கள் ஆகியவை, சகஜ மார்க்கத்தின் பல்வேறு அம்சங்களான நன்னடத்தை, சரணாகதி, முழுநம்பிக்கை, குறிக்கோள் மற்றும் பாதை ஆகியவைற்றை எடுத்துரைப்பதாக இருந்தன. பல மையங்களில், மாஸ்டரின் வாழ்விலிருந்து முக்கியமான நிகழ்வுகள், உரைகள், சிறு நாடகங்கள், குழு கலந்துரையாடல்கள் போன்ற வடிவங்களில், அப்யாசிகளுக்கு தொகுத்து வழங்கப்பட்டன.

அப்யாசிகளின் எண்ணங்களை, குறிக்கோளை அடைவதற்கான நோக்கம், வழிமுறை மற்றும் மனப்பான்மை ஆகியவற்றில் ஒருநிலைபடுத்துவதாக, கலந்துரையாடல்களை ஏற்பாடு செய்வதற்கு, சிறிய மற்றும் பெரிய மையங்கள் அனைத்து முயற்சிகளையும் எடுத்தன. இந்தியாவின் பல்வேறு மையங்களில், இந்நாள் உட்புற ஆராய்தலுக்காக (introspection) பயன்படுத்தப்பட்டது. பக்தி உணர்வு, அன்பு மற்றும்


அகமத் நகர்


நாக்பூர்


கோண்டியா


சோலாபூர்


பில்வாரா


ஜெய்ப்பூர்


ஃபுல்காவ்


ஜோத்பூர்


கொல்கத்தா


ராஞ்சி


மதுரை


சிக்கலி






## லூதியானா-பஞ்சாபில் முதல் ஆசிரமம்

லூதியானா-பகோவா சாலையில் அமைந்துள்ள ஆசிரமம் லூதியானா ரயில் நிலையத்திலிருந்து சுமார் பத்து கி.மீ தொலைவிலும், பேருந்து நிலையத்திலிருந்து ஆறு கி.மீ தொலைவிலும் உள்ளது. 2000 சதுர யார்ட் பரப்பளவில், 3 இரண்டு அடுக்காக உள்ள இந்த கட்டிடம், மாஸ்டரின் குடில், தியான அரங்கம், தங்கும் கூடங்கள் , குழந்தைகள் மையம், அலுவலகம், சமையலறை மற்றும் கழிவறை அனைத்தையும் கொண்டுள்ளது. தியானக் கூடத்தில், 350 நபர்கள் அமர வசதியுள்ளது. மாஸ்டரால் அங்கீகரிக்கப்பட்டு, அமெரிக்காவிலிருந்து சிறப்பாக வடிவமைக்கப்பட்ட மணி ஒன்று, ஆசிரமத்தில் உள்ளது.

குரு பூர்ணிமா தினமான ஜூலை 22 அன்று, சுமார் 300 அப்யாசிகள் கூடியிருக்க, மண்டலப் பொறுப்பாளர் சகோதரர் ஜெனரல்(ஓய்வு) ஹர்பஜன் சிங் அவர்களால் ஆசிரமம் திறந்து வைக்கப்பட்டது. மாஸ்டர் சென்னையிலிருந்து காணொலி இணைப்பு மூலமாக ஆசிரமம் திறந்து வைக்கப்பட்டதாக அறிவித்தார். மேலும் அவர், அப்யாசிகள் தங்கள் ஆன்மீக உயர்வுக்கு இந்த வசதியை பயன்படுத்திக் கொள்ளுமாறு அறிவுறுத்தினார். அதன் பின்னர் சகோதரர் ஹர்பஜன் சிங் சத்சங்கத்தை நடத்திய பின் உரையாற்றினார். லூதியானா மையப் பொறுப்பாளர், சகோதரர் ராமன் கபூர் இந்த அற்புதமான பரிசளிப்பிற்காக மாஸ்டருக்கு நன்றி தெரிவித்ததோடு அப்யாசிகள் மற்றும் தன்னார்வத் தொண்டர்களுக்கும் இதில் பங்கேற்றதற்காக நன்றி தெரிவித்தார். அனைத்து அப்யாசிகளும், ஆசிரமம் தெய்வீகத் தன்மையால் சூழ்ந்துள்ளதையும், மாஸ்டரின் பிரசன்னத்தையும் உணர்ந்தனர்.

## மானாமதுரை, தமிழ் நாடு

சிவகங்கை மாவட்டத்தின் மானாமதுரை மையம், ப்ரிபெக்ட் சகோதரர் இராதாகிருஷ்ணன் வீட்டில் பல வருடங்களாக நடைபெற்று வந்தது. சமீபத்தில் சகோதரர் நித்தியானந்தம் ஆசிரமத்திற்கு முப்பத்து மூன்று சென்ட் நிலத்தை நன்கொடையாகக் கொடுத்தார். இதில் 2400 சதுர அடியில் ஒரு தியானக் கூடமும், சமையலறை, கழிவறை மற்றும் அலுவலகமும் கட்டப்பட்டுள்ளது. மாஸ்டரின் அனுமதியுடன் ஜூன் 22 அன்று, முதல் சத்சங்கமானது, மண்டலப் பொறுப்பாளர் V.விஸ்வநாத ராவ் அவர்களால் நடத்தப்பட்டது. அருகிலிருக்கும் மையங்களிலிருந்து ஏறத்தாழ 200 அப்யாசிகள் பங்கேற்று, மாலை சத்சங்கம் வரை அங்கே தங்கினர்.

## வடக்கன்குளம், தமிழ் நாடு

வடக்கன்குளம், திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரியைச் சேர்ந்த சுமார் 300 அப்யாசிகள், மாஸ்டரது பிறந்த நாளை கொண்டாடுவதற்கும், மற்றும் புதிதாகக் கட்டப்பட்ட மாஸ்டரது குடில் திறப்பு விழாவிற்காகவும் கூடியிருந்தனர். மாஸ்டரின் நிரந்தரக் குடில் மற்றும் மேல் தளத்தில் அப்யாசிகளுக்கான தங்குமிடமாகவும், வகுப்பறையாகவும் உள்ள அறை இவற்றுடன், பாதியளவு நிரந்தரமான தியானக் கூடம், கழிவறைக் கட்டிடங்கள் மற்றும் கூரை வேயப்பட்ட ஒரு சமையலறை போன்றவற்றை உள்கட்டிட அமைப்பாகக் கொண்டு ஆசிரமம் முழுமையடைந்துள்ளது.

காலை 8.30 மணிக்கு, குடிலின் பொறிக்கப்பட்ட உலோக வில்லையானது திறக்கப்பட்டது. 9 மணிக்கு, சகோதரர் A. P. துரை சத்சங்கம் நடத்தினார். அதனைத் தொடர்ந்து, எவ்வாறு தெய்வீகப் பிரசன்னமானது, ஆசிரமம் மட்டுமின்றி அனைத்து இடங்களிலும் உணரப்படவேண்டும் என்ற பகுதி, மாஸ்டரின் உரையிலிருந்து படிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து முன்னறிவிப்பு ஏதுமின்றி நடத்தப்பட்ட அப்யாசிகளின் உரைகள், குழு கலந்துரையாடல் மற்றும் ஆசிரம வரலாறு பற்றிய ஒரு படத்தொகுப்பு, மற்றும் குரு பூர்ணிமா அன்று வழங்கப்பட்ட மாஸ்டரின் உரை ஆகியவை இருந்தன. சத்சங்கத்துடன் நிகழ்ச்சி முடிவடைவதற்கு முன்னர் சகஜ மார்க்கத்தைப் பற்றிய ஒரு கேள்வி பதில் நிகழ்ச்சி இடம் பெற்றது.

## பைய்யனூர், கேரளா

மாஸ்டர் கூறியபடி குரு பூர்ணிமா தினமான ஜூலை 22 அன்று, மண்டலப் பொறுப்பாளர் சகோதரர் K. U. மோகன், தியான மண்டபத்திற்கான அடிக்கல்லை நாட்டினார். இந்த விழாவில் 65 அப்யாசிகள் பங்கேற்றனர். விழாவின் தொடக்கமாக சத்சங்கமும், அதனைத் தொடர்ந்து அடிக்கல் நாட்டலும் நடைபெற்றது. காலை உணவை முடித்துவிட்டு, குழு கலந்துரையாடலுக்காக அப்யாசிகள் தியான அரங்கத்தில் கூடினர். மையப் பொறுப்பாளர் சகோதரர் T.V. குன்னி கண்ணன் தனது வரவேற்புரையில், இந்த அடிக்கல் நாட்டு விழா பைய்யனூர் ஆசிரம வளர்ச்சியில் ஒரு மைல் கல் என்று கூறினார். அவர், இனி நடக்கவிருக்கும் கட்டுமானப்பணிகளில் அப்யாசிகள் ஒவ்வொருவரும் மனப்பூர்வமான ஒத்துழைப்பை நல்குமாறு வேண்டிக் கேட்டுக்கொண்டார். இது, சேவை புரிவதன் மூலமாக, அப்யாசிகள் தங்களை வளர்த்துக்கொள்வதற்கு மாஸ்டரால் கொடுக்கப்பட்ட ஒரு பொன்னான வாய்ப்பு ஆகும் என்றும் அவர் கூறினார்.





## ஒரு மையத்தின் மலர்ச்சி - ஜோரா, ம.பி.





மத்திய பிரதேசத்தின் ரத்லாம் மாநகரின் அருகிலிருக்கும் ஜோரா என்ற சிறு நகரம், பல வருடங்களாக வெறும் பத்து வழக்கமான அப்யாசிகளை மட்டுமே கொண்டிருந்தது. ஜுலை 12-ம் தேதி அன்று, சகோதரி ருச்சியின் துவக்கமுயற்சியின் கீழ் 75 ஆர்வலர்கள் சகஜ மார்க்கத்தில் சேர்ந்தனர். ஜுலை 24-ம் தேதி ஜோராவில் மாஸ்டரின் பிறந்தநாள் விழா புதிய அப்யாசிகளுடன் கொண்டாடப்பட்டது. அதனை அடுத்து, ஆகஸ்ட் 3 மற்றும் 4-ம் தேதிகளில் ஒரு முழுநாள் நிகழ்ச்சிக்காக மண்டல பொறுப்பாளரான சகோதரர் பிரபாகர் தாஸ் அவர்கள், சில ப்ரிபெக்ட்கள் மற்றும் அப்யாசிகளுடன் ஜோரா மற்றும் ரத்லாம் ஆகிய இடங்களை பார்வையிட்டனர். இந்நிகழ்ச்சியில், ரத்லாம் மற்றும் மன்சௌரிலிருந்து வந்திருந்த அப்யாசிகளுடன் ஜோராவைச் சேர்ந்த 65 புதிய அப்யாசிகள் கலந்துகொண்டனர். சகஜ மார்க்க பயிற்சியைப் பற்றி, சகோதரர் தாஸ் ஆற்றிய உரை, கொடுத்த அளிக்கை மற்றும் ப்ரிபெக்ட்களுடன் அவர் நடத்திய கேள்வி-பதில் நிகழ்ச்சி மற்றும் முறைசாரா கலந்துரையாடல்கள் ஆகியன, அப்யாசிகளுக்கு தங்களுடைய அனைத்து சந்தேகங்களையும் போக்கிக்கொள்ள ஒரு நல்ல வாய்ப்பை அளித்தன.

ஆகஸ்ட் 9 மற்றும் 10-ம் தேதிகளில் 26 ஆர்வலர்கள் மிஷனில் சேர்ந்தனர். ஆக, மிகச் சில அப்யாசிகளையே கொண்டிருந்த ஒரு மையமானது, ஒரு மாத காலத்திற்குள்ளாக, உத்வேகத்துடன், சகஜ மார்க்கத்தை ஒரு வாழ்க்கை முறையாக எடுத்துக்கொண்ட 112 அப்யாசிகளைக்கொண்ட ஒரு மையமாக மாறியது. இதை நடத்திக்காட்டியதில், அருகாமை மையங்களைச் சேர்ந்த துணையாளர்கள் மற்றும் ப்ரிபெக்ட்கள் வெளிக்காட்டிய சகோதரத்துவமும் குழுமனப்பான்மையுடன் பணியாற்றிய விதமும் எடுத்துக்காட்டாக விளங்கியது.

### பரமக்குடி, தமிழ்நாடு

ஜுலை 6 மற்றும் 7-ம் தேதிகளில்,14 பேர் கொண்ட அப்யாசிகள் குழு ஒன்று, ப்ரிபெக்ட் சகோதரர் அருணாச்சலம் (சென்னை) அவர்களுடன் பரமக்குடி மற்றும் மானாமதுரை மையங்களை பார்வையிட்டது. ஜுலை 6-ம் தேதியன்று பரமக்குடியில், சுமார் 25 உள்ளூர் அப்யாசிகளுடன் காலை 11:30 மணிக்கு நிகழ்ச்சி துவங்கியது.

மதிய உணவிற்கு பிறகு, அனைத்து அப்யாசிகளும் சமீபத்தில் புதிதாக தியான மண்டபம் திறந்து வைக்கப்பட்ட மானாமதுரைக்கு சென்றனர். அவர்கள், மையப் பொறுப்பாளரான சகோதரர் ராதாகிருஷ்ணன் மற்றும் அங்கு கூடியிருந்த 70 அப்யாசிகளால் வரவேற்கப்பட்டனர். கொடுக்கப்பட்டிருந்த தலைப்புகளின் மீதான ஒரு குழு கலந்துரையாடல், மண்டபத்தில் கூடியிருந்தோரை உற்சாகத்தில் ஆழ்த்தியது. இதனைத் தொடர்ந்து மாலை 7:30 மணிக்கு சத்சங்கம் நடைபெற்றது. அப்யாசிகள் அன்றிரவு பரமக்குடிக்கு திரும்பினர்.

ஞாயிற்றுக்கிழமையன்று பரமக்குடி, ராமநாதபுரம், சிங்கம்புணரி, மதுரை, சிவகங்கை, மானாமதுரை மற்றும் சென்னையிலிருந்து வந்திருந்த 7 ப்ரிபெக்டகள் உட்பட, சுமார் 60 அப்யாசிகள் இருந்தனர். சகஜ மார்க்கத்தின் அடிப்படை அம்சங்கள் பற்றிய ஒரு கேள்வி-பதில் நிகழ்ச்சி மற்றும் மாஸ்டர், மிஷன், முறை பற்றிய ஒரு வினாடி வினா நிகழ்ச்சி ஆகியன அப்யாசிகளை உற்சாகத்துடன் பங்கெடுத்துக்கொள்ள வைத்தன. இது, இந்நிகழ்ச்சியின் ஒருங்கிணைப்பாளர்களை ஊக்கப்படுத்தியது. அன்றைய தினம் மூன்று சத்சங்கங்கள் நடத்தப்பட்டன. அனைத்து நிகழ்ச்சிகளும் சகோதரர் அருணாச்சலம் அவர்களால் ஏற்பாடு செய்யப்பட்டு நடத்தப்பட்டன. இந்நிகழ்ச்சிகள், அப்யாசிகளை சகஜ மார்க்கத்தைப் பற்றி மேலும் நன்றாக புரிந்துகொள்ள வைத்து, மிகவும் பயனுள்ளதாக அமைந்தன.

### பனசங்கரி, பெங்களூரு

ஜுலை 13-14 மற்றும் ஆகஸ்ட் 3-4 ஆகிய தேதிகளில், சுமார் 110 அப்யாசிகளுக்கு 'மனனா-சாதனயே சிந்தன ஷிபிரா' என்ற ஒரு கன்னட நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இது சகோதரர் பி. ஸ்ரீநிவாசா அவர்களால் ஒருங்கிணைக்கப்பட்டு, சகோதரி வசந்த குமாரி, சகோ. டாக்டர். கிருஷ்ணமூர்த்தி மற்றும் சகோ. பி. ஜி. சுப்ரமண்யா ஆகியோரின் துணையுடன் நடத்தப்பட்டது. துணையாளர்கள் மூவரும் பயிற்சியின் அடிப்படை அம்சங்களை விரிவாகக் கூறினர். பயிற்சியின் நுட்பமான அம்சங்களை வெளிக்கொணர்ந்து, கலந்துரையாடி அளிக்கும்பொருட்டு, அப்யாசிகளுக்கு தலைப்புகளுடன் சில கேள்விகளும் கொடுக்கப்பட்டன. ஒருங்கிணைப்பாளர்களின் விளக்கங்கள், மாஸ்டரின் மேற்கோள்கள் மற்றும் ஒரு கேள்வி-பதில் நிகழ்ச்சி ஆகியன அனைவரின் சந்தேகங்களையும் போக்கிக்கொள்ள உதவின. இந்நிகழ்ச்சியைப் பற்றிய விமர்சனக் குறிப்பு ஊக்கமூட்டுவதாக இருந்தது. மேலும், ஆன்மீக முன்னேற்றத்தை விரைந்து அடைவதற்கான ஏக்கத்தை ஏற்படுத்தவும் உதவியது.



## இளைஞர் நிகழ்ச்சிகள்

### மும்பய், மஹாராஷ்ட்ரா

மும்பய் மற்றும் பூனேவைச்சேர்ந்த 63 இளைஞர்கள் ஆகஸ்ட் 3, 2013 அன்று, புதிதாக உருவாக்கப்பட்ட பயிலரங்கத்தில், சகோ. மோஹன்தாஸ் ஹெக்டேயால் நடத்தப்பட்ட, ' சகஜ மார்க்கத்தில் தன் ஆர்வத்தை நிலைநிறுத்துதல் மற்றும் புதுப்பி த்துக்கொள்ளுதல் ' நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

அறிமுகத்திற்குப்பின், அவர்களை தங்களின் நாட்குறிப்பில், தாங்களே ஒரு பொறுப்பை குறித்துக்கொண்டு, இந்நிகழ்ச்சியின் மூலம் பெறப்பட்டதைப் பயன்படுத்தி, அப்பொறுப்பை முடிக்க கோரினார். அதன் பின் 'சமச்சீரான வாழ்க்கையின் அவசியம்' பற்றி ஒரு கருத்துரை வழங்கப்பட்டது. 'தினசரி பயிற்சியின் மீது ஆர்வத்தை மேம்படுத்துதல்', 'எண்ணத்தாக்கம் இல்லாமல் வாழ்வது எப்படி?' ஆகிய பொருட்களில், குழு கலந்துரையாடல்கள் நடைபெற்றன. இந்த உரையாடல்கள், தினசரி தியானமுறையில் அதிக ஆர்வம் கொள்ள, பல கருத்துகளை முன்வைக்க அவர்களுக்கு உதவின. சகோ. ஹெக்டே, சகஜமார்க்க சாதனையின் நோக்கங்களைப் பற்றிக் கூறி, நிகழ்ச்சியை முடித்ததைத் தொடர்ந்து, சத்சங்கம் நடைபெற்றது.

### பில்வாரா, ராஜஸ்தான்

2013, ஜூலை 28 ம் தேதி நடைபெற்ற இளைஞர் கூட்டத்தில், 15 அப்யாசிகள் கலந்து கொண்டனர். மாஸ்டரை நினைவில் நிறுத்தி, தினசரி வேலைகளைச் செய்வதின் மூலம் அவை எவ்விதமாக வழிபாடாக மாறிவிடுகின்றன என்பதைப்பற்றிக் கலந்துரையாடினர். இந்த கருத்தைப்பற்றி சில அப்யாசிகள் தங்கள் அனுபவங்களை பகிர்ந்து கொண்டனர். மிஷனின் நூல்களிலிருந்து இக்கருவைப்பற்றிய பல மேற்கோள்கள் படிக்கப்பட்டன. அடுத்த கூட்டம் கூடும் வரை, அனைவரும் நிலையான நினைவிலிருக்க முயற்சி செய்து, தங்கள் அனுபவங்களை பகிர்ந்து கொள்ளத் திட்டமிடப்பட்டது.



### ஸ்ரீகங்கா நகர், ராஜஸ்தான்

15 அப்யாசிகள், "சுய ஒழுக்கம்" பற்றிய ஒரு கருத்தரங்கத்தில் கலந்து கொண்டனர். இதைப்பற்றிய ஒரு வீடியோ நிகழ்ச்சியைப் பார்த்தபின், பாபூஜி கூறிய 'எவர் கட்டுப்பாடாக இருக்கிறாரோ அவர் மட்டும் தான் சீடர்' என்ற கருத்தை ஒட்டி கலந்துரையாடல் நடைபெற்றது. தினசரி சாதனா மற்றும் பத்து நியமங்களை ஒழுங்காக கடைப்பிடிப்பதின் மூலம், ஒருவர் சுயக்கட்டுப்பாடுடன் இருப்பது மட்டுமின்றி, வாழ்க்கையின் உண்மையான குறிக்கோளையும் அடைய முடியுமென தெளிவாக்கப்பட்டதுடன், நிகழ்ச்சி முடிவடைந்தது.



### கொல்கத்தா, மேற்கு வங்கம்

கொல்கத்தா மற்றும் ராணிகஞ்ச், அஸன்சால், ஜார்கிராம், துர்காபூர் முதலிய அருகாமை மையங்களிலிருந்து 40 அப்யாசிகள், கொல்கத்தாவின் பாபூஜி நினைவு ஆசிரமத்தில், இரண்டு நாள் இளைஞர் சந்திப்பிற்காகக் குழுமினர். மாலை சத்சங்கத்துடன் நிகழ்ச்சிகள் ஆரம்பமாயின.

'PASS IT ON' என்ற பாடலை அடிப்படையாக கொண்டு அறிமுகப் படலம் தொடங்கியது. இந்தக் குழு, 'அகத்தையும் புறத்தையும் சமச்சீராக அமைத்துக் கொள்ளுதல்' என்பதன் ஒரு பகுதியாக, 10 நியமங்களின் பொருட்கள் மீதான நாடகம் நடத்தியது. அது அனைவரையும் 10 நியமங்களையும் தீவிரமாக பின்பற்ற ஊக்குவித்தது. அடுத்த நாள் காலை மாஸ்டரின் உரைகளிலிருந்து, சாதனாவின் முக்கிய நோக்கங்கள் பற்றிய பல துணுக்குகள் சிறு சிறு இடைவெளிகளுடன் காண்பிக்கப்பட்டன. அதனால் அவர்களால், கேட்ட உரைகளின் மீது தீர ஆலோசிக்க முடிந்தது. Marble & Pipes என்ற பந்தயம், வாழ்க்கையில் சமச்சீராக இருக்க வேண்டியதன் முக்கியத்துவத்தை பற்றி எடுத்துக்காட்டியது. 'இரண்டே நிமிடம்' என்ற நிகழ்ச்சியில், ஒவ்வொரு அப்யாசியும், கொடுத்த தலைப்புகளில் உரையாற்றினர். மாலை சத்சங்கத்துடனும், அதன் பின் இருந்த அப்யாசிகளின் விமரிசனக் குறிப்புகளுடனும் நிகழ்ச்சிகள் நிறைவுற்றன.



### மும்பய் - அலிபாக் நோக்கி ஒரு பயணம்

ஜூன் 15 ம் தேதி, 45 இளைஞர்களும், சில ப்ரிபெக்டுகளும் பன்வெல் ஆசிரமத்திலிருந்து அலிபாக்கிற்குச் சென்றனர். ஒருவரை ஒருவர் தெரிந்து கொள்ளவும், மாஸ்டரின் நினைவில் ஆழ்ந்திருக்கும் பொருட்டும் இப் பயணத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அவ்விடத்திற்கு சென்ற பின், மாஸ்டரின் உரை ஒலி பரப்பப்பட்டது. அதையடுத்து, பத்து நியமங்கள் மீது ஒரு செயற்பாடு நடத்தப்பட்டது. அலிபாக் நகரத்தில் மதிய உணவு உண்ட பின் யாவரும் கடற்கரைக்குச் சென்று பொழுதைக் கழித்தனர். இரவு உணவிற்கு பின், சகோ. இச்செக் அடிசெஸ் ன் ஒரு

...contd.

வீடியோ காட்சி ஒளி பரப்பப்பட்டது. அதன்பின் களைப்புற்ற இளைஞர்கள் உறங்கச்சென்றனர். ஆண்கள் சகோ.தில்லு அவர்களின் பண்ணை வீட்டிலும், பெண்கள், சகோதரி. பீனா ஷா அவர்களின் வீட்டிலும் தங்கினர். அடுத்த நாள் காலை சத்சங்கம் அவர்களை மீண்டும் புதுப்பித்தது. பயிற்சியிலும், மிஷன் வேலைகளிலும் ஒருவர், அர்ப்பணிப்புடனும் மேலும் மேலும் ஆர்வத்துடனும் ஈடுபடுவது எப்படி என்பது குறித்து ஒரு கலந்துரையாடல் நடத்தப்பட்டது. நிகழ்ச்சிக்குப் பிறகு, பன்வேல் ஆசிரமத்திற்குத் திரும்பும் வழியில், நாகோதனேக்கு அருகில் உள்ள மற்றொரு சிறிய மையத்தினை இளைஞர்கள் பார்வையிட்டனர்.



## புதிய நியமனங்கள்

### மையப் பொறுப்பாளர்கள்

சகோ.கௌரி சங்கர் திவிவேதி
மிர்சாபூர், உ.பி.
சகோ.திலிப் குமார் சிங்
ஃபதேபூர், உ.பி.
சகோ.பியாரே லால்
முகல் சராய், உ.பி.
சகோ.ரவிக்குமார் ஜெயின்
ராபர்ட்ஸ் கன்ஜ் (சோனேபத்ரா) உ.பி.
சகோ.ஜே.கே.மஹ்ரோத்ரா
பஹ்ரைச், உ.பி.
சகோ.நரேஷ் சாவ்ரா
தன்பாத், ஜார்கண்ட்

சகோதரி.எலிசபெத் டென்லே
இயக்குநர், வரலாறு மற்றும் ஆவணக் காப்பகத் துறை

## ஒரு அழைப்பு

பிரசுரத்திற்கான ஆக்கபூர்வமான படைப்புகளை வழங்க, அப்யாசிகளையும், அவர்களது குழந்தைகளையும் பதிப்புக் குழுவினர் வரவேற்கின்றனர். ஆக்கங்கள் கீழ்க்கண்ட வகைகளில் ஏதேனும் ஒன்றாகவோ அல்லது அதற்கு மேற்பட்டதாகவோ இருக்கலாம்:

- கலை, உருவங்கள் அமைத்தல், வண்ண ஓவியம் அல்லது உங்களது சொந்த படைப்புகளில் உருவான மற்ற கலைப்படைப்புகள்.
- நீங்கள் சொந்தமாக எடுத்த புகைப்படங்கள்
- அடோப் போட்டோஷாப் அல்லது அதைப் போன்றதொரு மென்பொருளைப் பயன்படுத்தி தொகுக்கப்பட்ட வரைபடங்கள் - இத்தொகுப்பில் பயன்படுத்தப்பட்ட படங்கள்/கலைப்பணிகள் குறித்த தெளிவான குறிப்புகள் தரப்பட வேண்டும்.

பெறப்பட்ட இந்த கலைப் பங்களிப்புகள் பதிப்பகக் குழுவினரால் மீள்பார்வை செய்யப்படும். தேர்வு செய்யப்படும் படைப்புகள், மிஷனின் புத்தகங்கள் மற்றும் ஒலி-ஒளி பதிப்புகளின் அட்டை வடிவமைப்புக்குப் பயன்படுத்தப்படும். நீங்கள் உங்கள் படைப்புகளை பரிசீலனைக்கு அனுப்பும்போது, அதை வெளியிடுவதற்கான முழு உரிமையையும் ஸ்பிரிசுவல் ஹயரார்கி பதிப்பு நிறுவனத்திற்கு வழங்குகிறீர்கள் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

படைப்புகளை கீழ்க்காணும் வழிமுறைகள் மூலம் பகிர்ந்து கொள்லலாம்:

- மின்னணு ஊடகங்களின் வாயிலாக அனுப்பும் பொழுது, குறைவான அடர்த்தி (1 மெகாபைட்டுக்கும் குறைவாக) கொண்ட டிஜிட்டல் பிரதியாக, design@shpt.in என்ற முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பவும். படைப்புகள் தேர்ந்தெடுக்கப்படும் பட்சத்தில் அதன் அதிக அடர்த்தி கொண்ட பிரதி கேட்கப்படும்.
- அஞ்சல் வழியாக அனுப்பும் போது கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பவும்:

*Design Team*
*Spiritual Hierarchy Publication Trust*
*Admin Building, Babuji Memorial Ashram*
*Manapakkam, Chennai – 600 025*

உங்கள் படைப்புகளை அனுப்பும் போது, உங்கள் பெயர், வயது (குழந்தையாக இருந்தால்) அப்யாசி அடையாள அட்டை எண் (குழந்தைகள் அனுப்புவதாக இருந்தால், பெற்றோரின் அடையாள அட்டை எண்), மையத்தின் பெயர், முகவரி, தொலைபேசி எண் மற்றும் மின்னஞ்சல் முகவரி போன்றவற்றை தயவு செய்து குறிப்பிடவும். உங்களது படைப்புகள் பிரசுரத்திற்கு தேர்வு செய்யப்படும் பட்சத்தில், வரைபடக் குழுவினர் உங்களுடன் தொடர்பு கொள்வார்கள்.

## அன்புக்குரிய மாஸ்டர் அவர்களது உடல்நல அறிக்கை

அன்பார்ந்த சகோதர, சகோதரிகளே,

அன்புக்குரிய மாஸ்டரின் உடல்நிலை குறித்து உங்களுடன் பகிர்ந்து கொள்வதற்கு நீண்ட காலம் எடுத்துக் கொண்டதற்கு நான் வருந்துகிறேன். தற்போதைய சிகிச்சை முறைக்கு அன்புக்குரிய மாஸ்டர் நல்லதொரு பதில் விளைவைக் கொடுக்கிறார். ஆனால், சிகிச்சையினால் ஏற்படும் பக்கவிளைவுகள் அவரை பலவீனமாக்குகிறது.

வெறும் சங்கல்ப சக்தியைக் கொண்டு மட்டுமே அவர் தன்னுடைய பிசியோதெரபி சிகிச்சையை முறையாகத் தொடர்ந்து கொண்டிருக்கிறார்.

அவருடைய அனைத்து அளவீடுகளும் இயல்பாக உள்ளது. அவருடைய உடல் நலனிற்கு தயவு செய்து பிரார்த்தனை செய்யுங்கள்.

பிரார்த்தனைகள் மூலம் தனக்கு உதவி செய்து கொண்டிருக்கும் அனைவருக்கும் அவர் நன்றி தெரிவிக்கிறார்.

உண்மையுள்ள,
டாக்டர். நட்வர் சர்மா.

## புதிய வெளியீடுகள்



இன்ஸ்பிரேஷன்ஸ்
DVD ஆங்கிலம்



எ ரேர் ஆப்பர்ச்யூனிட்டி
DVD ஆங்கிலம்



இன்வெர்டென்டோ
DVD ஆங்கிலம்



ஒன் வோல்டு ஒன் பேமிலி
DVD ஆங்கிலம்



டிஸிப்லின் அண்ட் பிரதர்ஹுட்
DVD ஆங்கிலம்



கமென்டரி ஆன் டென் மேக்ஸிம்ஸ் அண்ட் எஃபிகஸி ஆப் ராஜயோகா
MP3-ஆங்கிலம்



சகஜ மார்க்க பத்து நியமங்களின் விரிவுரை மற்றும் சகஜ மார்க்க பார்வையில் ராஜ யோகத்தின் செயல் திறன்
MP3- தமிழ்



கமென்டரி ஆன் டென் மேக்ஸிம்ஸ் அண்ட் எஃபிகஸி ஆஃப் ராஜயோகா
MP3 - ஹிந்தி



சத்யோதயம்
MP3 - தமிழ்



விஸ்டம் டு வொன்டர்
ஆங்கிலம்



ஸ்பைடர்ஸ் வெப்-
பாகம் - 3 ஆங்கிலம்


இன் ஹிஸ் புட்ஸ்டெப்ஸ்-
பாகம் - 3 தெலுங்கு



டௌன் மெமொரி லேன்
ஹிந்தி



இதய வாக்கு - 2003
தமிழ்


டேல்ஸ் ஆப் வொன்டர்
பாகம் 1 கன்னடம்



பிரிபெக்ட்ஸ் டைரக்ட்ரி



தி ஹார்ட்ஸ் அட்வென்சர்

# ஈரோடு ஆசிரமம், தமிழ்நாடு

## ஒளி மையம்







ஈரோடு மையத்தின் முதல் அப்யாசி, கோயம்புத்தூரில் இருந்து வேலை மாற்றத்தினால் ஈரோடு வந்தார். அவர் ஈரோட்டில், புதிய வீடு ஒன்றினை முதல் மாடியில் தியான கூடத்துடன் கட்டினார். இவ்வாறு ஈரோடு மையமானது, பிப்ரவரி 1982ல் தொடங்கப்பட்டது. அவர் 1993 ல் ஈரோடு மையத்தின் முதல் பிரிபெக்டும் ஆனார். அப்யாசிகளின் எண்ணிக்கை அதிகரித்தபோது, 200 அப்யாசிகள் அமரத்தக்க வகையில், வீட்டின் பின்புறம் ஒரு புதிய கொட்டகை அமைத்து, தியானக் கூடத்தை அங்கு மாற்றினார்.

2000 ம் ஆண்டு நவம்பர் 3 ம் தேதி, மாஸ்டர், திடீரென ஈரோடு வந்தார். அங்கு சத்சங்கம் நடத்தினார். அவர் தங்கி இருந்த அந்த குறுகிய நேரத்தில், ஆசிரமத்திற்கென்று தனியாக நிலம் கட்டாயம் தேவை என்பதை அப்யாசிகள் அனைவரும் இதயபூர்வமாக உணர்ந்தனர். அதற்குப்பின்னர் விரைவிலேயே, பவானி மற்றும் பெருந்துறை இடையே, தேசிய நெடுஞ்சாலை எண் 47 ல், ஆட்டையாம்பாளையம் என்ற இடத்தில் ஆசிரமத்துக்கான புதிய இடம் வாங்கப்பட்டது.

2001 அக்டோபர் 24 ம் தேதி, ஏழு ஏக்கர் நிலம், கூட்டுறவு சங்கத்தின் பெயரில் பதிவு செய்யப்பட்டது. 2.38 ஏக்கர் நிலம் ஆசிரமத்திற்காக ஒதுக்கப்பட்டது. மீதம் இருந்த இடம் அப்யாசிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டது. 2001 டிசம்பரில், 250 அப்யாசிகள் அமரக்கூடிய வகையில், 60x60 அடியில், கூரையால் வேயப்பட்ட ஒரு தியானக்கூடம் அமைக்கப்பட்டது. நிலம் வாங்கியபோது இருந்த ஒரு பழைய ஓட்டுவில்லை கட்டிடம், மாஸ்டரின் குடிலாக தற்போது பயன்படுத்தப்பட்டு வருகிறது. அதில் மாஸ்டர் தங்குவதற்கு வசதியாகத் தேவையான மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

மாஸ்டர், பத்திரப்பதிவுக்காக, 2002 ஏப்ரல் 1 ம் தேதி ஈரோடு வந்து, இரண்டு நாட்கள் தங்கினார். அப்போது அவர், "ஈரோடு ஆசிரமம், அருகாமையில் உள்ள சிறிய மையங்களுக்கு நடு மையமாக செயல்படும்" என்றார். அதன்படி அருகில் உள்ள மையங்களில் இருந்து அப்யாசிகள் ஒவ்வொரு மாதமும் இரண்டாம் ஞாயிற்றுக் கிழமையில் இங்கு கூடுகின்றனர். மாஸ்டர் சாலை வழியாக திருப்பூருக்கு பயணம் செய்கின்றபோது ஈரோட்டில் தங்குவார். 4000 சதுர அடியில் நிரந்தர சமையல் அறை மற்றும் உணவுக்கூடம் கட்டும் பணி 2010ம் ஆண்டு தொடங்கப்பட்டது. 2011 மே மாதம் 14 ம் தேதி, மாஸ்டர் திருப்பூர் செல்லும் வழியில் ஈரோடு வந்தார். புதிய சமையல் அறை மற்றும் உணவுக் கூடத்தினைத் திறந்து வைத்து சத்சங்கம் நடத்தினார்.

ஆசிரமத்தில், கழிப்பறைகள், மின் உற்பத்தி இயந்திர அறை, விருந்தினர் அறை, பாதுகாப்பு அறை, குழந்தைகள் விளையாடுவதற்கான இடம் ஆகியவை உள்ளன. ஒவ்வொறு ஞாயிற்றுக்கிழமைகளிலும் ஈரோட்டைச் சேர்ந்த ஏறத்தாழ 200 அப்யாசிகள் சத்சங்கத்தில் கலந்து கொள்கின்றனர். மூன்று மாதங்களுக்கு ஒரு முறை அருகாமையில் உள்ள கருமண்டாம்பாளையம், அரச்சலூர், பவானி, பெருந்துறை, கோபி, கவிந்தபாடி, சத்யமங்கலம் மற்றும் பள்ளிபாளையம் அப்யாசிகளுக்காக முழு நாள் நிகழ்ச்சி நடத்தப்பட்டு வருகிறது. அதிகரித்து வரும் அப்யாசிகளின் எண்ணிக்கையினை மனதில் கொண்டு புதிய தியானக்கூடம் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது.






To download or subscribe to this newsletter, please visit http://www.sahajmarg.org/newsletter/india For feedback, suggestions and news articles please send email to in.newsletter@srcm.org

© 2013 Shri Ram Chandra Mission ("SRCM"). All rights reserved. “Shri Ram Chandra Mission", "Sahaj Marg", “SRCM”, “Constant Remembrance” and the Mission's Emblem are registered Trademarks of Shri Ram Chandra Mission.This Newsletter is intended exclusively for the members of SRCM. The views expressed in the various articles are provided by various volunteers and are not necessarily those of SRCM.